1978 ஏப்ரல் 6]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது கடலோரப் பகுதியில் இருக்கும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதேபோல், உள்பகுதியில் இருக்கும் மீனவர்களும் வீடு இல்லாத நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு திட்டம் தீட்டியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பூம்புகார், வாணகிரி போன்ற இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டது. இன்னும் சொல்லப்போனால் உள்நாட்டில் இருக்கும் மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருவதற்கு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தில் இருக்கும் மீனவர்கள் பகுதி எவை எவை, அதைத் தொடர்ந்து இந்த புதிய அரசும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆட்சி காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

ஆசிரியர்களுக்கு சீருடை.

*822 வின—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. ஆனல் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் சாதாரண ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் சீருடை வழங்கவும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைப்படி அளிக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, தற்போது போலீஸ்காரர்களுக்கு வழங்குவது போல், ஆசிரியர்களே சீருடை வாங்கிக் கொள்வதற்கோ அல்லது அரசாங்கமே அவர்களுக்கு வழங்குவதற்கோ, அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, எல்லா ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ரா. க. சு. தண்டபாணி: பேரவைத் தலைவரவர்களே, காவலர்களுக்கு அளிப்பதைப்போலவே ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கலாம் என்பது என்னுடைய கருத்து. அதேபோல், காவல் துறையில் குறிப்பாக மலைப் பகுதியில் பணிபுரிகிறவர்களுக்கு கம்பளி ஆடைகளைத் தருவது போல், மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் கம்பளி ஆடைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கோ அல்லது கீழே பணிபுரியும் ஆசிரியர்களுக்கோ சீருடை அல்லது வேறு ஆடைகள் தரும் ஆலோசனை இந்த அரசிடம் இல்லை.

(முற்பகல் 9.30)

திரு. கோ. இளங்கோவன்: ஆசிரியர்கள் சீருடை அணிய வேண்டுமென்று வற்புறுத்தாவிட்டாலும் கூட அனைத்து மாணவர்களும் சீருடையிலேதான் வரவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களும் மாணவர்களும் சீருடை அணிந்து வரவேண்டுமென்பது அரசின் விருப்பம்.

திரு. இரா. தாமரைக்கனி: எல்லா ஆசிரியர்களுக்கும் அரசு சீருடை வழங்காவிட்டாலும் வருஷத்திற்கு 100 ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகளைக் கொடுத்தால் தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகள் விற்பனை ஆகி அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுத்த மாதிரி இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுவும் இலவச சீருடை தருவது போன்றதுதான். அரசிடம் அத்தகைய திட்டம் இல்லை.